<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

E.P.91/1997

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ம் நாள் இன்று இந்த ம.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ்குமார் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வெள்ளியங்கிரி | கிராமம் | : | திருப்பூர் |
| வயது | : | | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 20-11-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

நான் திருப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். திருப்பூர் சார் பதிவாளருக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன் பேரில் சார் பதிவாளரின் அதிகாரம் பெற்ற நபர் என்ற முறையில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். உயில் ஆவண எண் 203/2015 ஆன 3 வது புத்தகம் எங்களுடைய பதிவு அலுவலகத்தில் பதிவுத்துறை நியமனங்களுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டது. அந்த உயில் ஆவணம் மூடி முத்திரையிடப்பட்ட உயிலாகும்.

2. 27.05.2014 ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட உயில் ஆவணம் எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மூடி முத்திரையிடப்பட்ட உயில் ஆவணம் திருமதி தனலட்சுமி என்பவர் மூலம் பதிவு செய்ய 02.06.2015 ம் விண்ணப்பம் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பத்துடன் பதிவு செய்வதற்காக ரூ.200/-க்கான ரசீது கொடுத்தார்கள். அவர் இந்த நிறைவேற்றுகை மனுவில் 2 ம் மனுதாரர் என்றால் அது பற்றி தெரியாது. மூடி முத்திரையிடப்பட்ட உயில் ஆவணம் யார் முன்னிலையில் எந்த தேதியில் திறக்கப்பட்டது என்றால் 03.06.2015 ம் தேதி மாவட்ட பதிவாளர் முன்னிலையில் திறக்கப்பட்டது.

3. உயில் ஆவணம் திறக்கப்பட்டபோது வி.பி.பெரியசாமி, புஷ்பா ஆகியோர் உடன் இருந்தனர். அவர்கள் உயில் ஆவணத்தின் சாட்சிகள் என்றால் சரிதான். உயிலில் சாட்சி கையொப்பம் இட்ட சாட்சிகள் உயிலின் விவரங்களை தெரிந்து கொண்டு ஒப்புக் கொண்ட பிறகு மாவட்ட பதிவாளர் முன்னிலையில் உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.11.20 14:57:51 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.